TNVR090001402015

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை .. திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ஆம் நாள் திங்கள் கிழமை
இ.ம.எண். 1/2024
இன்
முதலேற்பு வழக்கு எண்.25/2015

1. M. லீலாவதி (இறப்பு)
2. ஜெயப்பிரியா
3. நளினி
4. உஷாராணி
5. மாரிச்சாமி
6. அசோக்குமார்
7. அனிதா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தாமோதரன்
2. வெங்கடேஷ்
*3. அய்யலுச்சாமி (இறப்பு) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இ.ம.எண்.2/2024–ல் 19.10.2024–ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டது.)

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 18.01.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. ஹரிபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், எதிர்மனுதாரர்களுக்கு போதுமான கால அவகாசம்

வழங்கப்பட்டும் வாதுரைக்கு முன்வராததால் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மெயின் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சட்ட நடைமுறைகளை பின்பற்றாமலும், அனுமதி எதுவும் பெறாமலும் கடந்த 22.08.2023–ஆம் தேதியன்று தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுவின் 4–ஆம் மனுதாரர் அசல் வழக்கில் 4–ஆம் வாதி. மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மெயின் வழக்கானது தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மெயின் வழக்கில் கண்ட 1, 2 லக்க சொத்துக்கள் 29.12.2019–ஆம் தேதியிட்டு பால்ச்சாமி என்பவர் வழக்கில் கண்ட 1 முதல் 4 வாதிகளாகிய எங்களுக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்து அதனடிப்படையில் வழக்குரை சொத்துக்களை நாங்கள் எங்களது பெயரில் பட்டா மாறுதல் செய்தும், வரி செலுத்தியும் அனுபவம் செய்து வருகிறோம்.

மேற்படி வழக்கில் கண்ட 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.65/2010 என்ற வழக்கினை இவ்வழக்கின் 1 முதல் 4 வாதிகளும் தாவா சொத்தின் உரிமையாளருமான எங்களை தரப்பினர்களாக சேர்க்காமல்

இறந்து போன பால்ச்சாமி என்பவரை தரப்பினராக சேர்த்து அவர் இறந்து போன விபரத்தை நிதீமன்றத்திற்கு தெரிவிக்காமல் நீதிமன்றத்தினை ஏமாற்றி கடந்த 29.10.2011–ஆம் தேதியன்று மோசடியான முறையில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள். மேற்படி ஓ.எஸ்.எண்.65/2010 வழக்கில் 7–ஆம் பிரதிவாதி காட்டப்பட்டுள்ள பால்ச்சாமி என்பவர் கடந்த 26.08.2011–ஆம் தேதியன்று இறந்து போய்விட்டார். மேற்படி விபரத்தினை இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் மறைத்து கடந்த 29.10.2011–ஆம் தேதியன்று இறந்துபோன பால்ச்சாமி (7–ஆம் பிரதிவாதி) என்பவரையும் உள்ளடக்கி இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் கேட்டு இம்மெயின் வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி மெயின் வழக்கில் கண்ட 1–ஆம் வாதியான லீலாவதி கடந்த 10.04.2015–ஆம் தேதி இறந்து விட்டார். மேற்படியாரை பொறுத்து அவரது வாரிசான 5 முதல் 7 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுக்கள் இ.ம.எண்.215/2018 கடந்த 04.01.2020–ஆம் தேதியிட்டும், சீர்திருத்த மனுவானது இ.ம.எண்.01/2020 கடந்த 18.03.2020–ஆம் தேதியிட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு மெயின் வழக்கானது 2½ வருடங்கள் கழித்து விசாரணைக்கு எடுக்கப்பட்டு வழக்கில் கண்ட 4–ஆம் வாதி தரப்பில் முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலம் 18.07.2023–ஆம் தேதியிட்டு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே 1 முதல் 15 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் வாதி தரப்பு PW.1 சாட்சியினை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 01.08.2023, 11.08.2023, 14.08.2023, 16.08.2023 தேதிகளில் வாய்தாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் கடந்த

2½ வருடங்கள் கழித்து மேற்படி மெயின் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை கடந்ட 22.08.2023–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலம் கடந்து தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி அனுமதி கோரும் மனுவும் எதுவும் இத்துடன் தாக்கல் செய்யவில்லை. ஆதலால் மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 22.08.2023–ஆம்தேதியன்று தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையானது சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாததாகும். மெயின் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சட்ட முறைகளை பின்பற்றாமலும், அனுமதி எதுவும் பெறாமலும் கடந்த 22.08.2023–ஆம் தேதியன்று தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி வாதிகள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர்/4–ஆம் வாதி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.1/2024 என்ற மனுவில் மற்ற வாதிகள் யார் என்பதை அபிடவிட்டில் குறிப்பிடவில்லை. ஆனால், அபிடவிட்டு பாரா 1–ல் "நான் இந்த மனுவில் மனுதாரர் மெயின் வழக்கில் வாதி, இதர மனுதாரர்களுக்கும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளேன்" என்று கூறியுள்ள மனுதாரர்/4–ஆம் வாதி, இதர மனுதாரர்கள் யார் என்பதை அபிடவிட்டில் இல்லாமல் குறிப்பிட்டுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மனுதாரர்/4–ஆம் வாதி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.1/2024 என்ற மனுவில் அபிடவிட்டில் மனுதாரர்/4–ஆம் வாதி என்று குறிப்பிட்டுவிட்டு மற்ற வாதிகள் என்ன ஆனார்கள் என்பதையும், மனுவில் 1 முதல் 7 மனுதாரர்கள்/வாதிகள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் 1 முதல் 4 மனுதாரர்கள்/வாதிகள் விலாசங்கள் உள்ள நிலையில் 5, 6, 7 மனுதாரர்கள்/வாதிகள் என்ன ஆனார்கள் என்ற விபரத்தை மறைத்து இந்த

மனு தாக்கல் செய்துள்ளது தவறானதாகும்.

மனுதாரர்/4–ஆம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் பிரதிவாதிகள் தரப்பில் சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் அனுமதி எதுவும் பெறாமல் கடந்த 22.08.2023–ஆம் தேதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரிக்க உத்தரவிடக்கோரி பரிகாரம் கோரிய மனுதாரர் மற்ற மனுதாரர்கள் என்ன ஆனார்கள் என்றும், ஏன் 1 முதல் 4 மனுதாரர்களின் விலாசங்கள் மட்டும் குறிப்பிட்டு 5, 6, 7 மனுதாரர்களின் நிலை என்ன என்பதை நீதிமன்றத்தில் மறைத்து தாக்கல் செய்துள்ள மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

மேலும், வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை ஆரம்ப காலத்தில் 30.03.2015–ஆம் தேதி அதிகாரம் பெற்ற முகவர் மூலம் 31.03.2015–ஆம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்து கோப்புக்கு எடுக்காமல் திருப்பப்பட்டு 09.04.2015–ஆம் தேதி மீண்டும் திரும்ப தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிகார முகவர் மூலம் தாக்கல் செய்த அசல் வழக்கு 27.04.2015–ஆம் தேதி மீண்டும் இரண்டாம் முறையாக திரும்ப தாக்கல் செய்யும்போது 1–ஆம் வாதி M. லீலாவதி உயிருடன் இல்லை என்பது இந்த மனு அபிடவிட்டில் பாரா 5–ல் 10.04.2015–ஆம் தேதி 1–ஆம் வாதி இறந்து விட்டார் என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே, 10.04.2015–ஆம் தேதி இறந்துபோன 1–ஆம் வாதி உயிருடன் உள்ளார் என்று 27.04.2015–ஆம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்து 29.04.2015–ஆம் தேதி மீண்டும் திருப்பப்பட்டு ஓ.எஸ்.எண்.25/2015 என்ற அசல் வழக்கு அதன் பின்னர் கோப்புக்கு எடுக்கும்போதே மனுதாரர்/4–ஆம் வாதி அசல் வழக்கானது 1–ஆம் வாதி இறந்து விட்டதால் உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் மேற்படி வழக்கானது Abatement ஆகிவிட்டது.

மேலும், 10.04.2015–ஆம் தேதி இறந்துபோன 1–ஆம் வாதியின் பவர்

ஏஜென்டான J. மைதீன் அப்துல் காதர் என்பவர் தான் ஏற்படுத்திக்கொண்ட பவர் ஆவணமானது 11.04.2016–ஆம் தேதி ரத்து செய்து பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதன்படி மேற்படி அசல் வழக்கின் அதிகார முகவரின் ஸ்தானத்தில் இருந்து நீக்க வேண்டுமென்று இ.ம.எண்.1/2017 என்ற மனு 02.01.2017–ஆம் தேதி தாக்கல் செய்து 08.02.2017–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், 1–ஆம் வாதி 10.04.2015–ஆம் தேதி இறந்து விட்ட நிலையில் அப்போதே 1–ஆம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்காமல் மனுதாரர்/4–ஆம் வாதியின் வழக்கு Abatement தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இ.ம.எண்.1/2017 என்ற மனுவில் 1–ஆம் வாதி உயிருடன் உள்ளார் என்று தான் மனு தாக்கல் செய்துள்ளார். J. மைதீன் அப்துல் காதர் என்பவருக்கு அதிகாரம் கொடுத்த 1–ஆம் வாதி இறந்து போன நிலையில் இறந்து போனவரின் வாரிசுகளை சேர்க்காமல் அபேட்மெண்ட் ஆகிவிட்டது என்பதற்கு இ.ம.எண்.1/2017 என்ற மனு 02.01.2017–ல் தாக்கல் செய்துள்ள மனுவானது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் மனுதாரர்/4–ஆம் வாதி மேற்படி 1–ஆம் வாதியின் வாரிசுகளை இந்த மனுவில் சேர்க்கவில்லை என்பது தெளிவாகிறது.

10.04.2015–ல் இறந்துபோன 1–ஆம் வாதியின் அசல் வழக்கு 09.04.2015–ல் திருப்பப்பட்டு மறுநாளான 10.04.2015–ல் இறந்துள்ள நிலையில் J. மைதீன் அப்துல் காதர் அசல் வழக்கு அற்றுப்போய் விட்டது. அபேட்மெண்ட் தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரைரைய நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அதை ரிஜெக்ட் செய்ய சட்டத்தில் எந்த விதிமுறைகளும் இல்லை. மேலும், U/o.7 Rule 11 என்பது வழக்குரையை நிராகரிக்க வேண்டி தான் விதிமுறையில் உள்ளது. கூடுதல் எதிர்வழக்குரை என்று U/o.8 Rule 1–ல் விதிமுறை

வகுக்கப்பட்டுள்ள நிலையில் மனு U/o.7 Rule 11–ல் எதிர்வழக்குரையை நிராகரிக்க முடியாது. மேலும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மனுதாரர்/4–ஆம் வாதி தான் செய்த தவறை மறைக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை நிராகரிக்க வேண்டி மனு செய்துள்ளதாக தெரிகிறது. மேலும், பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கையை அனுமதித்துக்கொண்ட இந்நீதிமன்றம் அனுமதி வேண்டி மனு செய்ய பணிக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் தரப்பில் மனு செய்ய தயாராகவே உள்ளார்கள். ஆனால், 10.04.2015–ல் இறந்துபோன 1–ஆம் வாதியின் வாரிசுகள் உரிய நேரத்தில் சேர்க்காமல் அபேட்மெண்ட் ஆன அசல் வழக்கை ரிஜெக்ட் செய்யவே மனுதாரர்/4–ஆம் வாதி முன்னுக்கு பின் முரண்பட்டு மற்ற வாதிகளை சேர்க்காமல் சட்ட விரோத மனுவாக தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மனுதாரர் வேண்டுமென்றே அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஒவ்வொரு முறையும் வழக்கிற்கு தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து வருகின்றனர். எனவே, மனுதாரர்/4–ஆம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்உரையின் சுருக்கம் :–</u>**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது 22.08.2023–ஆம் தேதிய கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரிக்க கோரி மனு செய்துள்ள நிலையில் 3–ஆம் எதிர்மனுதாரர் காலமாகி விட்டதால் இறந்து போனவரின் வாரிசுகள் சேர்க்க தேவையில்லை என்று இந்த சீர்திருத்த மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் 3–ஆம் எதிர்மனுதாரரின் இறப்பு என்பதை மட்டும் சீர்திருத்தம் செய்துள்ளார்கள். ஆனால், இறந்து போனவரின் வாரிசுகள் உள்ளார்களா? அல்லது இல்லையா? என்ன காரணத்துக்காக சேர்க்கவில்லை என்று எந்த காரணத்தையும் இந்த மனுவில் தெரிவிக்காமல் சீர்திருத்தம் செய்துள்ளது சட்டப்படி தவறானதாகும்.

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் இறந்துபோன 3–ஆம் எதிர்மனுதாரர்/3–ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் ஏன் சேர்க்கவில்லை என்பதால் சீர்திருத்தம் மனு செய்துள்ளது சட்டப்படி தவறானதாகும். எனவே, மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் அதிகபட்ச செலவு தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7.** தற்போது இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**8.** இம்மனுவானது மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சட்ட நடைமுறைகளை பின்பற்றாமலும், அனுமதி பெறாமலும் கடந்த 22.08.2023–ஆம் தேதியன்று தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விளம்புகை பரிகாரமும் மற்றும் அதனை தொடர்ந்து தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் இறந்துபோன 1–ஆம் வாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளை சேர்க்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது கடந்த 18.03.2020–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டு வந்த நிலையில் கடந்த 29.03.2021–ஆம் தேதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டு நிலுவையில் இருந்துள்ளது.

**10.** இந்நிலையில் வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அது இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்ட பின்னர் இம்மனுவானது மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையானது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு அது இந்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரத்தால் பெறப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மேற்படி பிரிவின் கீழ் அதை நிராகரிக்கக் கோருவது ஏற்புடையதாக இல்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2024 இன்
மு.வ.எண்.25/2015
உத்தரவு நாள். 02.12.2024